# இராமானுஜர் வாழ்க்கை வரலாறு

கதை தொகுப்பு

அடியேன்
கார்த்திகா சிவகுமார்





✿🌷 திருக்கச்சி நம்பிகளை கட்டாயப்படுத்துதல் :-

இளையாழ்வான் மறுபடியும் திருக்கச்சி நம்பிகளிடம் சென்று, யாதவப் பிரகாசர் தன்னை காலட்சேபம் பண்ண வர வேண்டாம் என்று சொன்னதை, சொல்லி தன்னை சீடராக ஏற்கும்படி சொன்னார். இப்போதும் திருக்கச்சி நம்பிகள் மறுத்துவிட்டார். மறுபடியும் காஞ்சி பேரருளானனுக்கு நீர் எடுத்து வரும் சேவையைச் செய்யுமாறு பணித்தார். இளையாழ்வானும் அவ்வாறே செய்தார்.

என்ன செய்தாலும், திருக்கச்சி நம்பிகள் நமக்கு குருவாக ஆக மாட்டுறாரே என்ன செய்யலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்தார்.

மூன்று பேரின் எச்சில் இலைகளைச் சாப்பிடுவதன் மூலம், நாம் செய்த பெரும் பாவத்தை போக்கிக் கொள்ளலாம். வயதில் மூத்தவர்களான பெரியோர்கள், ஞானிகள், குரு. இவர்கள் உண்ட மிச்சத்தை ஒருவன் உண்டானானால் அவன் தன்னுடைய பிறவிப் பயனைக்கடந்து விடுவான். இதனால், திருக்கச்சி நம்பிகளை தம் வீட்டில் அமுதுண்ண அழைத்தார் இளையாழ்வான்.

ஏனெனில், தன்னை சிஷ்யானாக திருக்கச்சி நம்பிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் உண்ட எச்சிலை உண்டாவது பிறவிப் பயனை நீங்கி, அந்த வழியிலாவது அவரை குருவாக ஏற்றுக் கொள்ளலாம் என்று எண்ணினார் இளையாழ்வான். இதை அறிந்த திருக்கச்சி நம்பிகளோ நான் நாளை அமுதுண்ண வருகிறேன் என்று கூறிவிட்டார். இதனால் இளையாழ்வனுக்கு மிக்க மகிழ்ச்சி.

✿⚘ பேரருளாளனும், திருக்கச்சி நம்பிகளும் :-

தன் மனைவி தஞ்சம்மாளிடம் சொல்லி மறுநாள் திருக்கச்சி நம்பிகள் அமுதுண்ணுவதற்கு ஏற்பாடு செய்யச் சொன்னார் .இதனிடையே திருக்கச்சி நம்பிகள் பேரருளானுக்கு ஆலவட்டம் வீசிக்கொண்டிருக்கையில், பெருமாளிடம் கேட்டே விட்டார். இந்த இளையாழ்வானிடம் இருந்து என்னால் தப்பிக்க முடியவில்லbை. நீரே வழி சொல்லும் தேவரீரே! என்றார். பேரருளாளனும் திருக்கச்சி நம்பிகளே இளையாழ்வானை சிஷ்யனாக ஏற்றுக்கொள்ள வேண்டி தானே என்றார். அது வர்ணாசிரமத்திற்கு எதிரானது என்று பெருமாளிடம் கூறிவிட்டார்.

இளையாழ்வான் அமுது தயாராகியதும், பொழுதாகிவிட்டதே இன்னும் திருக்கச்சி நம்பிகள் வரவில்லையே என்று ,திருக்கச்சி நம்பிகளைத் தேடி தெருவின் வழியே தேடிச் சென்றார்.

இளையாழ்வான் இந்தப் பக்கம் அவரைத் தேடிச்செல்ல, இவரோ இந்த தெருவின் வழியாக வந்தார். தஞ்சம்மாளிடம் வேலைப்பளு அதிகம் இருப்பதால் தான் உடனே கிளம்ப வேண்டியதாக சொன்னார் .தஞ்சம்மாளும் அவருக்கு வீட்டு வாசலிலேயே அமுதமிட்டாள். அவர் உணவருந்தி முடிந்ததும், நான் செல்கிறேன் என்று தஞ்சம்மாளிடம் கூறிவிட்டு சென்று விட்டார் .

தஞ்சம்மாளும் அவர் பிராமணன் அல்லாதபடியால் உணவருந்திய மிச்சத்தை கொட்டிவிட்டு, தானும் தலை மெழுகி, அந்த இடத்தை மெழுகி, மீதமிருந்த உணவையும் கொட்டினார். இப்பொழுது இளையாழ்வான் வந்தார்.

தஞ்சம்மாளிடம் திருக்கச்சி நம்பிகள் பற்றி கேட்க  திருக்கச்சி நம்பிகள் வந்து உணவருந்தியதையும், அந்த இடத்தை சுத்தம் செய்ததையும் சொன்னாள். இளையாழ்வானுக்கு மிகுந்த வருத்தம். அவர் உணவருந்திய மிச்சத்தை உண்டு சந்தோசப்படலாம் என்று நினைத்தேன். அதற்கும் வழி இல்லையா !என்று அழுது புலம்பினார்.

பிறகு, வழக்கம் போல சாளக்கிணற்றிலிருந்து நீர் எடுத்து கைங்கரியம் செய்தார் இளையாழ்வான். திருக்கச்சி நம்பிகள் இனி தமக்கு குருவாக கிடைக்க மாட்டார் என்பதை உணர்ந்து, வேறு குருவைத் தேட நினைத்தார். பேரருளாளனிடம் பிரார்த்தித்தார்.

🍁✿ ஆளவந்தார் இளையாழ்வானை அழைத்துவரச் சொல்லுதல்

....

ஆளவந்தார் காஞ்சியிலிருந்து திருவரங்கம் புறப்பட்டுச் சென்றபின்பு இளையாழ்வானின்நினைவாகேவ இருந்தார் நமக்குப் பின்பு இந்த திருவரங்கம் ஆஸ்தானத்தில் அனைத்துமாக இருந்து இளையாழ்வான்தான்வைஷ்ணவ

சம்பிரதாயத்தை உலகெங்கும் பரப்ப வேண்டும் என்பதில் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

ஆளவந்தாருக்கும் வயது ஆகிக்கொண்டே சென்றது. முன்புபோல் செயல்படமுடியவில்லை. நினைத்துக் கொண்டார், தான் திருநாடு அலங்கரிக்கப்போகும் நாள் வந்துவிட்டது என்று. உடனே, பெரிய நம்பிகளை அழைத்தார். தன்னுடைய சிஷ்யர்களிடமும், பெரிய நம்பிகளிடமும் இளையாழ்வானைப் பற்றி விசாரித்தார்.

இளையாழ்வான் அத்வைதக் கொள்கையுடைய யாதவப்பிரகாசரிடம் காலட்சேபம் பண்ணுவதை நிறுத்திவிட்டார் என்று. இப்பொழுது என்ன செய்கிறார்? என்று கேட்டார் ஆளவந்தார். உடனே, அங்கிருந்தோர் இளையாழ்வான் இப்போது சாலக்கிணற்றிலிருந்து தீர்த்தம் எடுத்துவரும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளார் என்றும் திருக்கச்சி நம்பிகளிடம் கற்றுக் கொள்கிறார் என்றார்கள். திருக்கச்சி நம்பிகளுடன் இருப்பது, நல்லது என்று ஆளவந்தாருக்குத் தோன்றியது.

🍀💐 சிஷ்யர்களை அழைத்தார் :-

வயோதிகத்தால் தான் மிகவும் தளர்ச்சியடைந்ததைக் கூறி, சிஷ்யர்களை அழைத்து ஆளவந்தார் கூறியது :

'இறைவனே நம் வாழ்க்கை. இறைவன் மீது பூரணமாக நம்பிக்கை வைத்து, அவன் பாதங்களே தனக்கு அடைக்கலம் என்று இருப்பவன் உண்மையான பக்தன். கடவுள் மீது நம்பிக்கை இல்லாவிட்டால், ஒருவனுக்குத் தன் மீதே நம்பிக்கை இல்லையென்று அர்த்தம். நம் உள்ளத்தின் உருவகம் இறைவன். நாம் அவனிடம் உள்ளோம். அவன் நம்மிடம் உள்ளான். மனித சமுதாயத்திற்குச் சேவை செய்யவே இறைவன் நம்மைப் படைத்துள்ளான்!'.

இவ்வாறு அவர் கூறிவிட்டு திருவரங்கம் அரங்கநாதன் கோவிலுக்குச் சென்று, அரங்கனின் சந்நிதானத்தில் சிறிது நேரம் அமைதியாக நின்றார். பிறகு, சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். 'நான் தெரிந்தோ தெரியாமலோ இதுவரை செய்திருக்கூடிய பிழைகளைத் தேவரீர்! பொறுத்தருள வேண்டும்' என்று இறைஞ்சினார். அருகிலிருந்த பக்தர்கள் அழுதார்கள். ஆளவந்தார் தம்முடைய முடிவு மிக அருகிலிருப்பதாகக் கூறினார்.

🍁💐 பெரியநம்பிகள் இளையாழ்வானை அழைக்கச் செல்லுதல் :-

ஆளவந்தாரின் சீடர்களில் முக்கியமானவர்கள் ஐந்து பேர். அவர்கள் 1. பெரிய நம்பிகள் 2. பெரிய திருமலை நம்பிகள் 3. திருக்கச்சி நம்பிகள் 4. திருக்கோட்டியூர் நம்பிகள் 5. திருமாலையாண்டான். இவர்கள் ஐந்து பேருக்குமே ஆளவந்தார் தான் இருக்கும் பொழுது, முக்கியமான சில கடமைகளையும், பொறுப்புகளையும் கொடுத்தார்.

எப்படி அரசன் ஒருவன் தான் இறக்கும் தருவாயில், இளவரசனுக்குத் தேவையானவற்றை பூர்த்தி செய்து இறக்கிறானோ, அவனைப் போல இங்கு மன்னராக ஆளவந்தார் இருக்கிறார். இளவரசனாக இளையாழ்வான் இருக்கிறார். இப்போ இந்த ஆளவந்தாரான அரசனுக்கு, தனக்குப்பின் வைஷ்ணவத்தைத் தன் அகன்ற தோள்களால் தாங்கப்போகும் வருங்காலத் தலைவர் என்று எப்போது தோன்றியதோ, அப்பொழுதிலிருந்து இளையாழ்வான் இளவரசனாகிவிட்டார். இப்போ இந்த வருங்கால

இளவரசருக்கு வைஷ்ணவ சாம்பிராஜ்யத்தை திறமையுடன் நடத்த ,ஐந்து சீடர்களால் தான் முடியும் என்று, ஐந்து சீடர்களுக்கும் ஒவ்வொரு கடமையைத் தந்தருளினார் ஆளவந்தார். தன்னுடைய காலத்திற்குப்பின் உங்கள் ஐந்து பேருக்கும் ஒவ்வொரு கடமை இருக்கிறது. அதை நிறைவேற்றுவது நீங்கள் தான் என்றார் .

இப்பொழுது பெரியநம்பிகளை அழைத்து, 'நீர் போய் இளையாழ்வானை அழைத்து வாரும்' என்றார். அக்கட்டளையை ஏற்றுக்கொண்ட சீடர் பெரிய நம்பிகளும் உடனே காஞ்சிபுரம் புறப்பட்டுச் சென்றார்.

காஞ்சிபுரத்திற்கு வந்து சேர்ந்த பெரியநம்பிகள் திருக்கச்சி நம்பிகளைச் சந்தித்து , ஆளவந்தார் இளையாழ்வானை அழைத்துவரச் சொன்ன விதமாக விசயங்களைச் சொன்னார். திருக்கச்சி நம்பிகளும் மிகவும் மகழ்ச்சியடைந்தார் . "ஆளவந்தாருக்குப் பிறகு பட்டம் ஏறத் தகுதியுடையவர்' இளையாழ்வான் மட்டுமே என்றார் பெரியநம்பிகள் .

💐🌷 பெரியநம்பிகள் இளையாழ்வான் சந்திப்பு ...

திருக்கச்சி நம்பிகளிடம் ஆளவந்தார் திருவரங்கத்திற்கு இளையாழ்வானை அழைத்து வரச் சொன்னதாக சொன்னார் அல்லவா அந்த காலத்தில் குரு சிஷ்யன் எல்லாம் ஒருத்தருக்கொருத்தர் உடேன முன்னாடி போய் பேச மாட்டார் ஒருவர் கிட்ட பேசணும் என்றால் தனக்குத் தெரிந்தைத முதலில் வெளிப்படுத்துவார்கள் அப்படித்தான் பெரியநம்பியும் தான் ஆளவந்தாரின் சிஷ்யன் என்று சொல்லாமல் அவரின் தோத்திர ரத்தினத்தை காஞ்சி பேரருளாளன் முன்பு பாடுகிறார்

அடுத்தநாள் காலை நீராடிவிட்டு பெரியநம்பி ஆளவந்தார் இயற்றியுள்ள தோத்திர ரத்தினத்தை இசைத்துக் கொண்டு பாடினார் திருமஞ்சனத்திற்கு நீர் எடுத்து வந்த இளையாழ்வானின் காதுகளில் அந்த தோத்திரம் பாய்ந்தது அவர் மெய்மறந்து அப்படியே நின்றார் பெரியநம்பி பாடி முடிக்கும் வைர அங்கேய நின்றார் இளையாழ்வான் .

பெரியநம்பிகள் பாடி முடித்ததும்,அவரிடம் இந்த தோத்திர ரத்தினம் உங்களுக்கு எப்படித் தெரியும் என்று கேட்க அவேரா இது ஆளவந்தார் பற்றியது ஆளவந்தார் என் குரு என்கிறார் .

இளையாழ்வானுக்கு எப்படி தோத்திர ரத்தினம் பற்றி தெரியும் என்றால் திருக்கச்சி நம்பிகள் தன் குருவான ஆளவந்தார் பற்றியே ஜெபம் பண்ணுவார் அப்போது இளையாழ்வான் அவரிடம் எந்த மந்திரத்தைச் சொல்லி ஜெபம் செய்கிறீர்கள் என்பார் அப்போது ஆளவந்தார் திருநாமத்தைச் சொல்லி ஜெபம் செய் கிறேன் என்பார் திருக்கச்சி நம்பிகள் அப்போது தோத்திர ரத்தினம் பற்றி சொல்லி இருக்கிறார் திருக்கச்சி நம்பிகள்

இப்போது பெரியநம்பிகள் பாடவும் அவரிடம் இந்த பாடல் பற்றி விசாரித்துக் ,

கொண்டிருக்கிறார்.

அப்போது இளையாழ்வானிடம் வைஷ்ணவத்தில் தலைமைப் பொறுப்பு ஏற்பதற்கான எல்லாத் தகுதியும் இருக்கக் கண்டார் பெரியநம்பிகள் .

ஆளவந்தார் தம்மை அழைத்து வரச் சொன்னதாகச் சொல்கிறார்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

✿✿பெரியநம்பி இளையாழ்வானை திருவரங்கத்திற்கு அழைத்துச் செல்லுதல் :-

பெரியநம்பியிடம் இளையாழ்வான் ஆளவந்தார் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார். 'இந்தத் தெய்வத் திருமனிதரைக் காணும் நாள் எந்நாளோ என்றார் இளையாழ்வான். அவருக்கு உடல்நிலை சரியில்லை என்றும் ,அவரைக் காண விருப்பம் இருந்தால் உடனே புறப்பட்டு வரும்படியும் கூறினார் பெரியநம்பி.

இளையாழ்வான் திருக்கச்சி நம்பிகளை வணங்கி அவரிடம் அனுமதி பெற்று பெரியநம்பிகளுடன் திருவரங்கத்திற்குச் சென்றார்.

திருவரங்கத்து எல்லையை அடைந்தவுடன், கொள்ளிடம் ஆற்றின் அருகே கூட்டம் கூட்டமாக சீடர்கள், மக்கள் திரண்டிருந்தனர். அங்குப்பல இடங்களில் மக்கள் கூட்டம் கூட்டமாகச் சந்தித்துப் பேசுவதை அறிந்த இவர்கள் என்ன என்று விசாரிக்கலாம் என்று, பெரியநம்பி விசாரித்தார். அவர்கள் கூறிய செய்தி பேரிடியாக இருந்தது.

ஆளவந்தார் இறைவனடி அடைந்துவிட்டார். விதி நம்மை வஞ்சித்துவிட்டது என்று புலம்பினார் இளையாழ்வான். ஆளவந்தாருக்குச் செய்யும் சம்பிரதாய சடங்குகளைச் சீடர்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

✿⚘ மடங்கிய மூன்று விரல்கள் :-

இளையாழ்வான் ஆளவந்தாரைக் காண காஞ்சியிலிருந்து வந்தார். ஆனால், ஆளவந்தாரின் திருமேனி தரிசனம் மட்டுமே அவருக்குக் கிடைத்தது. ஆளவந்தாரின் வலக்கையில் மூன்று விரல்கள் முடங்கியிருந்ததை இளையாழ்வான் கண்டார் . அதுபோது அருகில் உள்ள சீடர்கள்களிடம் விசாரித்தார். ஒருவருக்கும் அதுபற்றிய சரியான காரணம் கூற இயலவில்லை.

'ஆளவந்தாருக்கு ஏதேனும் மனக்குறை உண்டோ?' என்று கேட்டார் இளையாழ்வான். அப்போது ஒரு சிஷ்யன் கூறினார்.

1. வியாசசூத்திரத்திற்கு விசிஷ்டாத்வைத வியாக்யானம் செய்ய வேண்டும் என்று விரும்பினார். அது முடியாமல் போய்விட்டது.

2. பராசருடைய திருநாமமும், திருவாய்மொழியை அருளிச் செய்த நம்மாழ்வாருடைய திருநாமமும் விளங்கும்படியாக ,அப்பெயர்களை இரண்டு பிள்ளைகளுக்குச் சாத்த வேண்டும்.

3. அவர்களுடைய கல்வி அறிவுக்கான நிர்வாகத்திற்கும் பொறுப்பேற்க விரும்பினார்.

இம்மூன்றும் நடைபெறாமலே போய்விட்டது என்றார் அந்த சீடன்.

இதைக்கேட்ட இளையாழ்வான், ஆளவந்தாரை வணங்கினார். அவரது மனதில் ஓர் உறுதி ஏற்பட்டது. அந்த மனஉறுதியுடன், "இறைவன் திருவருள் எனக்குக் கிடைக்குமானால் இம்மூன்றையும் நான் நிறைவேற்றுவேன்!" என்றார். உடனே, ஆளவந்தாரின் மடங்கிய மூன்று விரல்களும் நிமிர்ந்தன. இதைக்கண்ட அனைவரும் ஆச்சரியம் அடைந்தார்கள்.

அருகிலிருந்த அனைவருக்கும் இளையாழ்வான் இதைச் செய்து முடிக்கக் கூடியவர் என்று தான் தோன்றியது. ஆளவந்தாருக்குப் பிறகு வைஷ்ணவ இயக்கத்தைத் தலைமை ஏற்கும் தகுதி உடையவர் இளையாழ்வானே என்று அங்குள்ள பெரியோர்கள் கருதினார்கள்.

ஆளவந்தாரின் சாமக் கிரியைகள் நடைபெற்றது. இளையாழ்வான் மிகுந்த வருத்தம் அடைந்தார். தனக்கு குருவும் சரியாக அமையவில்லை. இனியாவது இவரை குருவாக பற்றிக் கொள்ளலாம் என்று பார்த்தால், இவரின் திருமேனி தரிசனம் மட்டுமே நமக்குக் கிடைத்தது என்று நொந்து கொண்டார். எனக்குக் குருவாக ஆளவந்தாரைக் கொடுக்காத இந்த திருவரங்கத்துப் பெருமாளை இப்போது தரிசிப்பதில்லை. அவர் நினைத்திருந்தால் குருவிடம் சிஷ்யனாக இருக்கும் பாக்கியத்தைக் கொடுத்திருப்பார் அல்லவா!.

எனக்குக் குரு தரிசனம் கொடுக்காத, திருவரங்கத்து பெரிய பெருமாளைத் தரிசிக்கப் போவதில்லை என்று சொல்லிக்கொண்டு, காஞ்சிபுரம் நோக்கி புறப்பட்டார்.

நாம் சாதாரணமாகவே திருவரங்கத்திற்குச் செல்ல நேரிட்டால், நிச்சயம் அரங்கனைத் தரிசித்துவிட்டு வருவோம். இல்லையெனில் கோபுரத்தைப் பார்த்தாவது தரிசித்துவிட்டு வருவோம்.

ஆனால், வைஷ்ணவர்களுக்கு குரு இல்லையேல் பெருமாளே இல்லை. குருவின் தரிசனம் கிடைத்தால் தான் அரங்கனைத் தரிசிப்பார்கள். குரு அவ்வளவு உயர்ந்தவர்கள். இப்போது, இளையாழ்வானும் குரு தரிசனம் கிடைக்காததால் காஞ்சிபுரத்தில் இருந்து, திருவரங்கத்திற்கு இவ்வளவு தூரம் நடந்து வந்தும், அரங்கநாதனை தரிசிக்கவில்லை என்றால், குருவின் தரிசனம் எவ்வளவு அவசியமானது!.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

❁✿ இளையாழ்வான் திருக்கச்சி நம்பிகளைச் சந்தித்தல் :-

யாதவப் பிரகாசரிடம் அத்வைதம் கற்றுக் கொண்டிருக்கும் போதே, இளையாழ்வானின் அன்னை காந்திமதியும் இறைவனடி அடைந்துவிட்டார். அதன் பின் திருக்கச்சி நம்பிகளிடம் சிஷ்யராகக் கேட்க அவரும் மறுத்துவிட்டார்.

ஆளவந்தாரையாவது குருவாக ஏற்றுக்கொண்டு, அவரிடம் ஸ்ரீவைஷ்ணவ காலட்சேபம்

பண்ணலாம் என்றால் அதுவும் முடியவில்லை. மனதில் ஆயிரம் குழப்பம் இருந்தாலும், காஞ்சிபுரம் வந்தடைந்தபின் பேரருளானனுக்கு சாலக்கிணற்றில் இருந்து தீர்த்தம் எடுத்துவந்து கைங்கரியம் செய்தார்.

அப்போது திருக்கச்சி நம்பிகளை வழக்கம் போலச் சந்தித்து, பேசிக்கொண்டிருந்தார். திருக்கச்சி நம்பிகள் ஆளவந்தாரைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார் இளையாழ்வானிடம். இளையாழ்வானும் தான் திருவரங்கம் சென்றதையும், அங்கு நடந்த சம்பவங்களையும் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

திருக்கச்சி நம்பிகளும் ஆளவந்தார் இறைவனடி அடைந்ததை நினைத்து வருத்தமடைந்தார். திருக்கச்சி நம்பிகளுடைய குரு அல்லவா ஆளவந்தார். திருக்கச்சி நம்பிகளும் சில மணி நேரம் கழித்து மனம் நிம்மதியடைந்தார். இளையாழ்வான் ஆளவந்தாரின் மூன்று ஆசைகள் நிறைவேறாததை அங்கிருந்தோர்களிடம் இருந்து தெரிந்து கொண்டதாகவும், அந்த மூன்று ஆசைகளை தான் நிறைவேற்றுவதாக சபதம் சொன்னதையும், அப்போது மடங்கிய மூன்று விரல்களும் நிமிர்ந்தன என்பதையும் சொல்லிக் கொண்டிருந்தார்.

✿ விசிஷ்டாத்வைதம் :-

பிரம்ம சூத்திரத்திற்குப் பாஷ்யம் எழுத வேண்டும் என்றால், அதற்குத் தம்மை முதலில் தயார் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இளையாழ்வானின் மனதில் விஸ்வரூபம் எடுத்தது. ஆதிசங்கரருடைய அத்வைதத்துடன் மாறுபட வேண்டும் என்றால், அதற்கு முதலில் தம்மைச் சிறந்த முறையில் தயார் செய்ய வேண்டும்.

அப்படித் தயார் செய்தால் தான், அவருக்கு இணையான ஞானத்தைப் பெற முடியும். இதனால், இளையாழ்வான் விசிஷ்டாத்வைத வியாக்யானம் எழுதுவது பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார்.

திருக்கச்சி நம்பிகளிடம் அதைப்பற்றி தொடர்ந்து விசாரித்துக் கொண்டிருந்தார். திருக்கச்சி நம்பிகளும் தொடர்ந்து கைங்கரியம் செய்து கொண்டிரு இளையாழ்வான். தக்க காலம் வரும் வரை காத்திரு என்றார்.

இளையாழ்வானும் காத்திருக்கிறேன் என்று கூறினார். ஆனால், இளையாழ்வானுக்கு ஆளவந்தார் இறுதி சடங்கில் சபதம் செய்த நினைவு வந்து கொண்டே இருக்கவே, தன்னால் இந்த மூன்றையும் நிறைவேற்ற முடியுமா? யாரை குருவாக ஏற்றுக் கொண்டால் இது நிறைவேறும்? என்று நினைத்துக் கொண்டிருந்தார்.

சில தினங்களில் திருக்கச்சி நம்பிகளிடமே தம்முடைய குழப்பத்தைச் சொல்லி, அவர் காஞ்சி பேரருளாளனிடம் கேட்டு தன்னுடைய குழப்பத்திற்குத் தீர்வு கிடைக்கச்சொல்லி கேட்குமாறு வேண்டினார்.

திருக்கச்சி நம்பிகளும் காஞ்சி பேரருளாளனிடம் உன்னுடைய குழப்பத்தைச் சொல்லி தீர்வு கேட்கிறேன் என்றார். இளையாழ்வானும் மகிழ்ச்சி அடைந்தார்.

**தொடரும். . .**

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿